# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் ஒப்பந்த அடிப்படையில் உப புகையிரத நிலையாதிபதிகளுக்கான ஆட்சேர்ப்பு - 2025

இலங்கைப் புகையிரத திணைக்களத்தில் ஒப்பந்த அடிப்படையில் இணைத்துக் கொள்ளப்படும் உப புகையிரத நிலையாதிபதி பதவிகளுக்கான வெற்றிடங்கள் நிலவும் கீழ்வரும் உப புகையிரத நிலையங்களுக்காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விஜய ரஜதஹன
2. கிராம்பே
3. திம்பிரியாகெதர
4. நாவின்ன
5. பனாகொடை
6. கப்புவத்தை
7. முதலீட்டு அபிவிருத்தி வலயம்
8. கும்பல்கம
9. பொரலெஸ்ஸ
10. நெலும்பொக்குன
11. பின்வத்தை
12. கட்டுகுருந்த
13. கந்தேகொடை
14. திரானகமை
15. ஹீன்தெனிய பட்டிகொட
16. அருக்வத்தை
17. ஜயந்திபுரம்
18. இனுவில்
19. ரத்கம
20. வல்கம
21. குமாரகந்த
22. கொக்குவில்
23. மாவிட்டப்புரம்
24. தெல்லை
25. ஆரச்சிக்கட்டுவ

01. **உப புகையிரத நிலையாதிபதிகளுக்குரிய கடமைகளின் விபரம்** :

பிரவேச பத்திர விற்பனை நிலையத்திற்கு பொறுப்பாக சேவையில் ஈடுபடுத்தப்படும் பிரதிநிதிகள் அவ்அவ் நிலையங்களில் நிறுத்தப்படும் புகையிரதங்களுக்கு அமைய 24 மணித்தியாலங்களிலும் அனுமதிப் பத்திரங்களை விற்பனை செய்தல்,பொதிகளை பாரமெடுத்தல் மற்றும் கிடைக்கின்ற பொதிகளை உரிமையாளருக்கு வழங்குதல் மற்றும் தினசரி கிடைக்கும் பணத்தினை பிரதான புகையிரத கணக்காய்வாளருக்கு செலுத்துதல் , அந்நிலையத்தை தூய்மையாக வைத்திருத்தல் மற்றும் புகையிரத பொது முகாமையாளரினால் சந்தர்ப்பத்திற்கு ஏற்ப வழங்கப்படும் வேறு கடமைகளை மேற்கொள்ளல் என்பனவும் இப் பிரதிநிதிகளால் மேற்கொள்ளப்பட வேண்டிய பொதுவான கடமைகளாகும்.

02. **கொடுப்பனவுகள் :**

இப் பதவி நிரந்தர ஊழிய படையின் எண்ணிக்கையினுள் அடங்காததாகும். தெரிவு செய்யப்பட்டவர்களுக்கு அவ் அவ் உப புகையிரத நிலையங்களின் வருமானத்தை அடிப்படையாக கொண்ட தரகு பணம் மற்றும் அனுமதிக்கப்பட்ட கொடுப்பனவுகள் மாத்திரம் செலுத்தப்படும். மேலும் ஆகக் குறைந்த தரகு பணத்தொகை ரூபா 310.00 என்பதோடு (வருமானத்திற்கு அமைய தரகு பணத்தொகையை கணக்கிடும் போது கிடைக்கும் முழு தரகு பணத்தொகை ரூபா 10,000.00 விடவும் குறைகின்ற பொழுது ரூபா 10,000.00 தரகு பணத்தொகை கிடைக்கும்.) அத் தரகு பணத்தொகைக்கு புறம்பாக ரூபா 5,329.00 கொடுப்பனவு உரித்தாகும்.

03. இப் பதவிக்கு ஆண் விண்ணப்பதாரிகளுக்கு மாத்திரமே விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பதாரியொருவருக்கு தனது தூர எல்லையில் நிலவும் மூன்று வெற்றிடங்களுக்கு விருப்பத்தின் பொருட்டு விண்ணப்பிக்க முடியும் என்பதோடு பரீட்சையில் உப புகையிரத நிலையங்கள் இரண்டு அல்லது அதிக எண்ணிக்கை தொடர்பில் அதிக புள்ளிகளை பெற்றிருந்தால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டிருந்த மற்றைய விருப்பத்துக்குரிய நிலையங்களுக்கமைய உப புகையிரத நிலையங்களில் நியமிப்பது தொடர்பில் கவனத்திற்கொள்ளப்படும், ஏதேனும் ஒரு உப புகையிரத நிலையம் தொடர்பில் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் விருப்பத்தினை தெரிவித்த ஏனைய உப புகையிரத நிலையங்களில் வெற்றிடங்கள் காணாப்பட்டாலும் மீண்டும் அப் புகையிரத நிலையத்தினை கோருவதற்கான எவ்வித உரிமையுமில்லை என்பதோடு அவ் உப புகையிரத நிலையத்திற்கான விருப்பு தெரிவுகளும் செல்லுபடியற்றதாகிவிடும்.

04. **வயதெல்லை** : விண்ணப்பங்களை பொறுப்பேற்கும் இறுதித் தினத்திற்கு 18 வயதுக்கு குறையாத வகையிலும் 45 தினை விஞ்சாத வகையிலும் இருத்தல் வேண்டும்.

05. கல்விசார் தகைமைகள்: க.பொ.த.(சா/தர) பரீட்சையில் சிங்களம்/தமிழ்/ஆங்கிலம் மற்றும் கணிதம் உள்ளடக்கிய பாடங்களில் நான்கு திறமை சித்திகளுடன் 06 பாடங்கள் ஒரே தடவையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

06. **வேறு தகைமைகள்** :

I. விண்ணப்பதாரி குறித்த உப புகையிரத நிலையத்திலிருந்து (20 கிலோ மீட்டர் தூரத்தினுள் நேர் தூரம்) அண்மித்த தூர எல்லையில் 05 வருட காலத்துக்கு நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும். ஆட்சேர்பிப்பதற்கான கடிதம் வழங்கப்படுவதன் முன் இதனை ஏற்றுக்கொள்ளப்பட கூடிய ஆவணங்கள் மூலம் உறுதிப்படுத்த வேண்டும். (கிராம உத்தயோகத்தர் சான்றிதழ், பிரதேசச் செயலாளரது சான்றிதழ், வாக்காளர் பட்டியலின் பிரதி போன்றவை) விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரி நிரந்தர முகவரியாக காணப்பட வேண்டும் என்பதோடு புகையிரத நிலையத்திற்கு உள்ள நேரடி தூரமானது அவ்விடத்தில் இருந்தே கணிப்பிடப்பட வேண்டும்.

II. விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

III. உயரம் 5' 4" மற்றும் மார்பு 32" விடவும் குறையாமல் காணப்பட வேண்டும்.

IV. உப புகையிரத நிலையாதிபதியாக தற்போது சேவை செய்யும் ஒருவருக்கோ அல்லது அவ்வாறு சேவையில் ஈடுபட்டு சேவை நிறுத்தப்பட்ட ஒருவருக்கோ இதற்கு விண்ணப்பிப்பதற்கான உரிமை இல்லை.

V. சிறந்த உடல்நல நிலைமை மற்றும் சிறந்த கண் பார்வையை கொண்டவர் என்பதை உறுதி செய்த பின்னரே தெரிவு செய்யப்படுவர். இம் மேற்கூரிய தகைமைகளையும் சிறந்த கண் பார்வையையும் உடையவராயிருத்தல் கட்டாயமாகும்.

07. **தெரிவுசெய்யும் முறை** :

புகையிரத பொது முகாமையாளரினால் நடாத்தப்படும் எழுத்து மூல பரீட்சையில் திறமையின் அடிப்படையில் தெரிந்தெடுக்கப்படுவர். அதனடிப்படையில் நடாத்தப்படும் எழுத்து மூல பரீட்சையின் போது அனைத்து விண்ணப்ப தாரிகளும் கீழ்வரும் பாடங்களின் கீழ் 02 வினாத்தாள்களுக்கு விடையளிக்க வேண்டும்.பரீட்சையில் தகைமைகளை பெற்றுகொள்வதற்காக ஒரு பாடத்தில் குறைந்த பட்சம் 40 புள்ளிகள் வீதம் பெற வேண்டும்.

I. **மொழித்திறன்**:

காலம் 01 மணித்தியாலயம் – மொத்த புள்ளி 100.

கிரகித்தல் மற்றும் முறையாக மொழியை பயன்படுத்துவது தொடர்பான விடய பரப்புக்களை உள்ளடக்கிய வினாப்பத்திரமாகும்.

II. **நுண்ணறிவு பரீட்சை:**

காலம் 01 மணித்தியாலயம் –மொத்த புள்ளி 100

வினாத்தாளிலேயே விடையளிக்க வேண்டிய கணித பிரச்சனைகள்,மொழி தொகுதி, அட்டவணைகள், குறிப்பு, வரைபுகளை தழுவிய தர்க்க ரீதியான நொடியில் தீர்மானம் மேற்கொள்ளும் திறமையை கொண்ட விமர்சன அறிவினை அளவிடுவதற்கான பல்வினா மாதிரி வினாத்தாளாகும்.

குறிப்பு :

I. போட்டி பரீட்சையில் தகைமைகளை பெற்றவர்களில் அவ் அவ் நுழைவுச்சீட்டு விற்பனை நிலையத்திற்கமைய அதிக புள்ளியை பெற்ற விண்ணப்பதாரிகள் ஏற்புடைய நுழைவுச்சீட்டு விற்பனை நிலையத்திற்கு நியமிப்பதற்கான தகைமைகளை பரிசோதிக்கும் நேர்முக பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

II. நேர்முக பரீட்சையின்போது புள்ளிகள் வழங்கப்பட மாட்டாது.

III. தகைமைகளை பூர்த்தி செய்தோர் சம புள்ளிகளை பெற்றிருப்பாராயின் அவ்வாறான சந்தர்ப்பத்தில் புகையிரத நுழைவுச்சீட்டு விற்பனை பிரதிநிதியின் கீழ் அல்லது உப புகையிரத நிலையாதிபதியின் கீழ் அனுமதிக்கப்பட்ட மாற்று தொழிலாளியாக சேவை செய்துள்ள விண்ணப்பதாரிக்கு சந்தர்ப்பம் வழங்கப்படும். அவ்வாறு நிகழாத பட்சத்தில் குறித்த நுழைவுச்சீட்டு விற்பனை நிலையத்திலிருந்து மிகவும் அண்மையில் உள்ள வதிவிடவாளர் தெரிவு செய்யப்படுவார்.

08. **சேவையில் இணைத்து கொள்வதற்கான நிபந்தனைகள்** :

I. தேர்ந்தெடுக்கப்பட்டவர்களால் புகையிரத பொதுமுகாமையாளரினால் நிர்ணயிக்கப்பட்டவாறு அல்லது குறைந்த பட்சம் ரூபா 25000.00 வினை பாதுகாப்பு பிணையாக புகையிரத பொது முகாமையாளரது பெயரில் வைப்பிலிடப்பட வேண்டும் என்பதுடன் புகையிரத பொது முகாமையாளரோடு மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் நிபந்தனைகள் பிரகாரம் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும். அவ் நிபந்தனைகளை மீறுதல் சேவையை நிறைவு செய்வதற்கான காரணமாக அமையும்

II. இது ஒப்பந்த அடிப்படையிலானதொன்று என்பதோடு ஒவ்வொரு ஆண்டிலும் குறித்த ஒப்பந்தத்தை புதிப்பித்தல் வேண்டும். அவ்வாறு புதுப்பிக்காத சந்தர்ப்பங்களில் ஒப்பந்தம் செல்லுபடியற்றதாகிவிடும்.

III. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் புகையிரத பொது முகாமையாளரினால் விதிக்கப்பட்ட புகையிரத நிலையமொன்றில் தங்கள் இணைந்துகொள்ளும் நிலையத்தின் கடமைகள் தொடர்பில் 14 நாள் பயிற்சியை பெற்றுகொள்ளல் வேண்டும். இப்பயிற்சி காலத்திற்கென எவ்வித கொடுப்பனவுகளும் செலுத்தப்பட முடியாது.

IV. தனக்கு பதிலாக உதவியாளராக வேலை செய்வதற்கு புகையிரத திணைக்களத்தின் அனுமதியுடன் தனக்கு ஓர் உதவியாளரை அனுமதித்துக் கொள்ள முடியும் என்பதோடு அவ் மாற்று தொழிலாளிகள் தொடர்பில் திணைக்களத்தினால் எவ்வித கொடுப்பனவுகளும் செலுத்தப்பட மாட்டாது. உப புகையிரத நிலையத்தின் முழுபொறுப்பும் உப புகையிரத நிலையாதிபதியைச் சாறும்.

V. பயிற்சி பெறும் காலப்பகுதியினுள் அல்லது உப புகையிரத நிலையாதிபதியாகச் சேவை செய்யும் ஏதேனும் ஓர் சந்தர்ப்பத்தில் அல்லது நேர்முக பரீட்சையில் அல்லது வேறு ஏதேனும் சந்தர்ப்பத்தில் விண்ண்பதாரியினால் அவரை பற்றி வழங்கப்பட்டுள்ள/தரப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை மற்றும் செல்லுபடியானவை அல்ல என தெரிய வருமிடத்து எவ்வித முன்னறிவித்தலோ நஷ்ட ஈடோ இன்றி உடனடியாக உங்களது சேவை நிறுத்தப்படும்.

VI. உப புகையிரத நிலையாதிபதியாக தெரிவு செய்யப்பட்ட ஒருவருக்கு அத்தேர்வின் அடிப்படையில் புகையிரத திணைக்களத்தில் எவ்வித நிரந்தர பதவியையும் வழங்குவதற்கு திணைக்களம் பொருந்த மாட்டாது.

09. **சேவை நிபந்தனைகள் :**

i. கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தத்தில் ஏதேனுமொரு நிபந்தனையோ அல்லது சில நிபந்தனைகளோ மீறப்படுமிடத்து அவரது நியமனமானது உடனடியாக முடிவுறுத்தப்படும்.

ii. புகையிரத பொது முகாமையாளரினால் காலத்திற்கு காலம் வழங்கப்படுகின்ற சட்டதிட்டங்கள் மற்றும் விதிகளுக்கு கீழ்படிய இணங்க வேண்டும்.

10. **பரீட்சை கட்டணம்** :

அனைத்து விண்ணப்பதாரிகளும் மீண்டும் செலுத்தப்படாத ரூபா 500.00 ஐ புகையிரத பொது முகாமையாளரின் பெயரிற்கு மக்கள் வங்கி இலக்கம் 176100129027313 உடைய கணக்கிற்கு வரவு வைத்து பெற்றுக்கொள்ளப்படும் பற்றுச்சீட்டினை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். வேறு முறைகளில் பரீட்சை கட்டணங்கள் செலுத்துதல் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதற்கான காரணமாக அமையும். பூரணமற்ற அல்லது முறையற்ற விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும். பரீட்சைக்கு தோற்றும் விண்ணப்பதாரிகள் தமது ஆள் அடையாளத்தை பரீட்சை மண்டபத்தில் உறுதிபடுத்த வேண்டும். .

11. **விண்ணப்பங்களை சமர்பித்தல் :**

விண்ணப்பதாரியினால் தட்டச்சு எழுதும் கடதாசி அளவான கடதாசியில் (A -4) விண்ணப்பம் தயாரிக்கப்பட வேண்டியதுடன், விண்ணப்பத்தை இட்டு அனுப்பும் கடித உறையில் இடது பக்க மூலையில் "உப புகையிரத நிலையாதிபதி பரீட்சைக்கான விண்ணப்பம் 2025" எனக் குறிப்பிட்டு "புகையிரத பொது முகாமையாளர், புகையிரத பொது முகாமையாளர் காரியாலயம், தபெ. இல. 355, கொழும்பு 10" எனும் முகவரிக்கு 2025.08.11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும் (மாதிரி விண்ணப்பம் கீழே தரப்பட்டுள்ளது).

12. **விண்ணப்பங்களை உறுதிப்படுத்தல் :**

விண்ணப்பத்தில் உள்ள விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க அதிபரொருரினால் அல்லது சமாதான நீதவானொருவரினால்/சத்திய பிரமாணம் செய்த ஆணையாளரொருவரினால்/ சட்டத்தரணியொருவரினால்/ முப் படையில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரொருவரினால் அல்லது பொலிஸ் சேவையில் வர்த்தமானியில் பிரசுரிக்கப் பட்ட பதவியினை வகிக்கும் உத்தியோகத்தரொருவரினால் அல்லது அரசாங்க சேவையில் உள்ளூராட்சி சேவையில், சேவையில் உள்ள பதவிநிலை உத்தியோகத்தரொருவரினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

13. சிங்களம் மற்றும் தமிழ்மொழியில் பிரசுரிக்கப்படும் இவ் அறிவித்தலில் மொழிகளுக்கிடையில் ஏதேனும் வேறுபாடு காணப்படுவதாக தோன்றுமிடத்து அவ்வாறான சந்தர்ப்பத்தில் சிங்கள மொழியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் படி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

புகையிரத பொது முகாமையாளர்.

புகையிரத பொது முகாமையாளர் அலுவலகம்,
கொழும்பு 10.